www.LatestWalkin.com

# வி.ஏ.ஓ. தேர்வு மாதிரி வினாத்தாள் - 4

## (பொது அறிவு)

1. 'சனாதன தர்மம்' என்பதன் பொருள்
அ) உன்னத நிலை ஆ) அழிவிலா அறம்
இ) அழிவிலாத பொருள் ஈ) உண்மையான நிலை

2. இந்தியாவில் காப்பீடு சட்டம் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1938 ஆ) 1948
இ) 1958 ஈ) 1968

3. மிடக்சரா சட்டம் (MITAKSARA ACT) என்பது
அ) குடும்பத்திலுள்ள அனைவருக்கும் சம உரிமை
ஆ) குடும்பத்திலுள்ள பெண் வாரிசுகளுக்கு மட்டுமே சொத்துரிமை
இ) குடும்பத்திலுள்ள ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே சொத்துரிமை
ஈ) குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு மட்டுமே சொத்துரிமை

4. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா
இ) பிரான்ஸ் ஈ) ஜெர்மனி

5. மக்கள் திட்டத்தை (People's Plan) வகுத்தவர்
அ) ஸ்ரீமன் நாராயணன் ஆ) குல்சரிலால் நந்தா
இ) அம்பேத்கர் ஈ) எம்.என். ராய்

6. யூரோ (Euro) நாணயம் முதன் முதலில் நடைமுறைக்கு வந்த ஆண்டு
அ) 1998 ஆ) 1999
இ) 2000 ஈ) 2001

7. வங்கி நிர்வாகம் மற்றும் அமைப்பு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழு
அ) டாக்டர் ரங்கராஜன் குழு ஆ) டாக்டர் ராஜா செல்லையா குழு
இ) நரசிம்மம் குழு ஈ) எல்.கே.ஜா. குழு

8. 9 செ.மீ, 12 செ.மீ, 7 செ.மீ என்ற பக்க அளவுகள் கொண்ட ஒரு முக்கோணத்தின் பரப்பளவு என்ன?
அ) 31.22 செ.மீ$^2$ ஆ) 30 செ.மீ$^2$
இ) 32 செ.மீ$^2$ ஈ) 31.42 செ.மீ$^2$

9. $\log_3^{27} + \log_3^{729}$ என்பதன் மதிப்பு
அ) 0 ஆ) 1
இ) 3 ஈ) 9

10. உறுதியான நிகழ்ச்சியின் நிகழ்தகவு
அ) 0 ஆ) -1
இ) 1 ஈ) $\alpha$

11. ஒரு கோட்டில் அமையாத மூன்று புள்ளிகள் வழியாக எத்தனை வட்டங்கள் வரையலாம்?
அ) ஒன்று ஆ) இரண்டு
இ) மூன்று ஈ) எண்ணற்றவை

12. Cos $63^0 20^1$ என்பது எதற்குச் சமமானது
அ) cosec $63^0 20^1$ ஆ) tan $26^0 40^1$
இ) sec $26^0 40^1$ ஈ) sin $40^0 26^1$

13. படத்திலிருந்து $\chi$ன் மதிப்பு காண்க.




அ) 10 ஆ) 20
இ) 30 ஈ) 60

14. வெற்று கணத்தின் ஆதி எண்
அ) 0 ஆ) 1
இ) $\pi$ ஈ) $\alpha$

15. A மற்றும் B ஆகியோரின் வயது வித்தியாசம் 12 வருடங்கள் Aன் வயது Bன் வயதைப் போல் 3 மடங்கு எனில் Bன் வயது என்ன?
அ) 5 ஆ) 6
இ) 7 ஈ) 8

16. இரு எண்களில் மீ.பொ.வ. 12, அந்த எண்களின் மீ.சி.ம. 180, ஒரு எண் 36 எனில் மற்றொரு எண் எது?
அ) 12 ஆ) 36
இ) 60 ஈ) 120

17. வாக்களிப்போரின் வயது வரம்பை 21லிருந்து 18ஆக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி குறைத்த வருடம்
அ) 1989 ஆ) 1985
இ) 1988 ஈ) 1986

18. 'அமைதி அரண்மனை' (Peace Palace) கட்டிடம் அமைந்துள்ள இடம்
அ) ஸ்டாக்ஹோம் ஆ) தென் கொரியா
இ) லண்டன் ஈ) தி ஹேக்

19. இந்திய அரசியலமைப்பின் முகவுரையைத் தயாரித்து வழங்கியவர்
அ) அம்பேத்கார் ஆ) சர்தார் படேல்
இ) ஜவஹர்லால் நேரு ஈ) எம்.என். ராய்

20. உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் அமைப்பு
அ) மாவட்டத் தேர்தல் ஆணையம்
ஆ) மாநிலத் தேர்தல் ஆணையம்
இ) மத்தியத் தேர்தல் ஆணையம்
ஈ) மாநில அரசு

21. நிதிக்குழுவை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றவர்
அ) குடியரசுத் தலைவர்
ஆ) பிரதமர்
இ) திட்டக்குழு துணைத் தலைவர்
ஈ) நிதித்துறை அமைச்சர்

22. முழுக்க முழுக்க மின்னணு வாக்கு எந்திரத்தினால் முதலில் நடத்தப்பட்ட மக்களவைப் பொதுத்தேர்தல்
அ) 13வது மக்களவைப் பொதுத் தேர்தல்
ஆ) 14வது மக்களவைப் பொதுத் தேர்தல்
இ) 15வது மக்களவைப் பொதுத் தேர்தல்
ஈ) 16வது மக்களவைப் பொதுத் தேர்தல்

23. லோக் சபா நடைபெறுவதற்குக் குறைந்தபட்சம் எத்தனை உறுப்பினர்கள் சபையில் இருக்க வேண்டும்?
அ) பத்தில் ஒரு பங்கு

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

ஆ) மொத்த உறுப்பினர்களில் அரை பங்கு
இ) மொத்த உறுப்பினர்களில் முக்கால் பங்கு
ஈ) மொத்த உறுப்பினர்களில் கால் பங்கு

24. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் பகுதிக்கு உயர்நீதி மன்றம் செயல்படும் இடம்
அ) போர்ட்பிளேர் ஆ) சென்னை
இ) கொல்கத்தா ஈ) மும்பை

25. பாக்சைட் மிகுதியாக உற்பத்தி செய்யப்படும் இந்திய மாநிலம்
அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) கர்நாடகம்
இ) கேரளா ஈ) தமிழ்நாடு

26. இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவது
அ) மும்பை ஆ) சென்னை
இ) கோயம்புத்தூர் ஈ) தூத்துக்குடி

27. உலகின் மிகப் பழைமையான மடிப்பு மலை
அ) ஆல்ப்ஸ் மலை ஆ) ஆரவல்லி மலை
இ) இமயமலை ஈ) விந்திய மலை

28. கங்கையின் முக்கியத் துணையாறு
அ) கங்கோத்ரி ஆ) சரஸ்வதி
இ) யமுனை ஈ) சட்லெஜ்

29. காற்றின் பூரித நிலையில் ஒப்பு ஈரப்பதத்தின் அளவு
அ) 50% ஆ) 75%
இ) 80% ஈ) 100%

30. செம்மண்ணின் சிவப்பு நிறத்திற்குக் காரணம்
அ) இரும்பு ஆக்சைடு ஆ) மெக்னீசியம் ஆக்சைடு
இ) அலுமினியம் ஆக்சைடு ஈ) கலீனா

31. ஆஸ்தனோஸ்பியர் என்பது
அ) பெருங்கடல் மேலோடு ஆ) சியால் அடுக்கு
இ) கவச மேலடுக்கு ஈ) கண்டமேலோடு

32. அசோகரின் கலிங்கப்போர் பற்றிய குறிப்பு காணப்படும் பாறைக் கல்வெட்டு
அ) ஏழாம் பாறைக் கல்வெட்டு
ஆ) ஒன்பதாம் பாறைக் கல்வெட்டு
இ) பன்னிரெண்டாம் பாறைக் கல்வெட்டு
ஈ) பதின்மூன்றாம் பாறைக் கல்வெட்டு

33. இரண்டாவது புத்த சமய மாநாடு நடைபெற்ற இடம்
அ) ராஜகிருஹம் ஆ) வைசாலி
இ) பாடலிபுத்திரம் ஈ) காஷ்மீர்

34. ரிக் வேத காலத்தில், பல கிராமங்கள் இணைந்தது
அ) விஷ ஆ) ஜன
இ) நாடு ஈ) விசு

35. 'உணவைச் சேகரிப்போர்' என்று அழைக்கப்பட்டவர்
அ) பழைய கற்கால மக்கள் ஆ) புதிய கற்கால மக்கள்
இ) உலோகக்கால மக்கள் ஈ) இரும்பு கற்கால மக்கள்

36. கர்ஸன் பிரபு விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தைத் தொடங்கிய இடம்
அ) டெல்லி ஆ) சென்னை மாகாணம்
இ) வங்காளம் ஈ) பம்பாய்

37. 'சூரத் காங்கிரஸ் பிளவு' ஏற்பட்ட வருடம்
அ) 1905 ஆ) 1907
இ) 1911 ஈ) 1913

38. பிற்காலச் சோழ அரசின் முதல் அரசர்
அ) ஆதித்ய சோழன் ஆ) ராஜராஜ சோழன்
இ) முதலாம் பராந்தகன் ஈ) விஜயாலய சோழன்

39. வர்ணாசிரம முறை தோன்றிய காலம்
அ) வேதகாலம் ஆ) முற்கால வேதகாலம்
இ) பிற்கால வேதகாலம் ஈ) செம்புக் காலம்

40. 'மறுமலர்ச்சியின் தாயகம்' என்று அழைக்கப்படும் நாடு
அ) இத்தாலி ஆ) கிரேக்கம்
இ) இந்தியா ஈ) அமெரிக்கா

41. இந்திய செயற்கை உடல் உறுப்புகள் உற்பத்தி நிறுவனம் அமைந்துள்ள இடம்
அ) அகமதாபாத் ஆ) மும்பை
இ) கான்பூர் ஈ) கொல்கத்தா

42. கத்தியவாரிலிருந்த ஜுனாகத் அரசு இந்தியாவுடன் இணைக்கப்பட்ட ஆண்டு
அ) 1946 ஆ) 1947
இ) 1948 ஈ) 1949

43. கீழ்க்கண்டவர்களில் மிதவாதி யார்?
அ) லாலா லஜபதிராய் ஆ) பெரோஷா மேத்தா
இ) பிபின் சந்திரபால் ஈ) அரவிந்த கோஷ்

44. 'அரை அணாவில் காஷ்மீரத்தையும், கன்னியாகுமரியையும் இணைத்தவர்' - இந்த வாக்கியத்திற்குச் சொந்தக்காரர்
அ) டல்ஹௌசி பிரபு ஆ) வெல்லெஸ்லி பிரபு
இ) வில்லியம் பெண்டிஸ் பிரபு ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

45. 2010ஆம் ஆண்டு உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியை நடத்திய நாடு
அ) ஆஸ்திரேலியா ஆ) தென்கொரியா
இ) இந்தியா ஈ) ஜெர்மனி

46. பிரெஞ்ச் ஓபன் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் போட்டியில் விளையாடத் தகுதி பெற்ற ஒரே இந்தியர்
அ) லியாண்டர் பயஸ் ஆ) மகேஷ் பூபதி
இ) சானியா மிர்ஸா ஈ) சோம்தேவ் வர்மன்

47. சச்சின் டெண்டுல்கருக்கு சமீபத்தில் இந்திய விமானப்படையில் வழங்கப்பட்ட கௌரவப் பதவி
அ) மார்ஷல் ஆ) ஏர் மார்ஷல்
இ) குரூப் கேப்டன் ஈ) கேப்டன்

48. 'இந்தியாவின் பெரும் முதிய மனிதன்' (Grand Oldman of India) என்று அழைக்கப்படுபவர்
அ) தாதாபாய் நௌரோஜி ஆ) மகாத்மா காந்தி
இ) பாலகங்காதர திலகர் ஈ) மொரார்ஜி தேசாய்

49. 'இந்தியா வின்ஸ் ஃப்ரீடம்' (India Wins Freedom) என்ற நூலின் ஆசிரியர்
அ) ராஜேந்திர பிரசாத் ஆ) அபுல் கலாம் ஆசாத்
இ) ஜவஹர்லால் நேரு ஈ) டாக்டர் அம்பேத்கார்

50. இந்தியா முதன் முதலில் (ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற) ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் தங்கம் வென்ற ஆண்டு

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

அ) 1920 ஆ) 1924
இ) 1928 ஈ) 1932

51. கீழ்க்கண்டவற்றில் ஒன்று பதங்கமாகும் பொருளுக்கு எடுத்துக்காட்டு
அ) பென்சாயிக் அமிலம் ஆ) ஃபார்மிக் அமிலம்
இ) அசிட்டிக் அமிலம் ஈ) டார்டாரிக் அமிலம்

52. நிலவில் ஒரு பொருளின் எடை புவியில் அதன் எடையைப்போல்
அ) ஒரு பங்கு ஆ) இரண்டு பங்கு
இ) சமமாக இருக்கும் ஈ) ஆறில் ஒரு பங்கு

53. டங்ஸ்டன் என்ற தனிமத்தின் குறியீடு W. எந்த மொழியிலிருந்து 'உல்ஃப்ரம்' என்ற சொல் டங்ஸ்டனுக்காகப் பெறப்பட்டது?
அ) கிரேக்கம் ஆ) லத்தீன்
இ) ஜெர்மன் ஈ) ஸ்பானிஷ்

54. சமையல் வாயு என்பது
அ) புரோப்பனோன் மற்றும் பியூட்டனோன் வாயுக்களின் கலவை
ஆ) பியுட்டேன் மற்றும் புரோப்பேன் வாயுக்களின் கலவை
இ) ஈத்தேன் மற்றும் புரோப்பேன் வாயுக்களின் கலவை
ஈ) மீத்தேன் மற்றும் ஈத்தேன் வாயுக்களின் கலவை

55. 'ஆல்கலி' என்ற அரேபியச் சொல்லின் பொருள்
அ) போதையூட்டும் பொருள் ஆ) காரமான பொருள்
இ) தாவர சாம்பல் ஈ) விலங்கு சாம்பல்

56. சிலிசால்ட் பீட்டர் என்பது
அ) சோடியம் நைட்ரேட் ஆ) பொட்டாசியம் நைட்ரேட்
இ) கால்சியம் நைட்ரேட் ஈ) அம்மோனியம் கார்பனேட்

57. 1 கலோரி என்பது
அ) 4 ஜூல்கள் ஆ) 4.2 ஜூல்கள்
இ) 3 ஜூல்கள் ஈ) 3.5 ஜூல்கள்

58. கல்பனா - 1 என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட செயற்கைத் துணைக்கோள்
அ) மெட்சேட் ஆ) இன்சாட்
இ) கார்டோசாட் ஈ) ரோஹிணி

59. ஓர் இசைக்கலவையின் அதிர்வெண் 512 ஹெர்ட்ஸ் எனில் அதன் அலைவு நேரம்
அ) 195 வி ஆ) 0.225 வி
இ) 0.00195 வி ஈ) 225 வி

60. $H = I^2 Rt$ என்பது
அ) ஓம் விதி ஆ) ஜூல் வெப்ப விளைவு விதி
இ) ஃப்ளமிங் வலக்கை வதி ஈ) ஃப்ளமிங் இடக்கை விதி

61. ஊடுருவும் திறன் அதிகம் கொண்ட கதிர்கள்
அ) ஆல்:பா கதிர்கள் ஆ) பீட்டா கதிர்கள்
இ) காமா கதிர்கள் ஈ) ஆல்ஃபா மற்றும் பீட்டர் கதிர்கள்

62. வைரத்தின் அடர்த்தி
அ) 2.3 கி/செ.மீ$^3$ ஆ) 3.5 கி/செ.மீ$^3$
இ) 4.7 கி/செ.மீ$^3$ ஈ) 5.9 கி/செ.மீ$^3$

63. வேதியியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர்
அ) லவாய்சியர் ஆ) ஜான் டால்டன்
இ) நீல்ஸ் போர் ஈ) ரூதர்போர்டு

64. கிரிக்னார்டு வினைபொருள் என்பது
அ) ஆல்கைல் கால்சியம் ஹேலைடுகள்
ஆ) அரைல் மெக்னீசியம் ஹேலைடுகள்
இ) அரைல் கால்சியம் ஹேலைடுகள்
ஈ) ஆல்கைல் மெக்னீசியம் ஹேலைடுகள்

65. பாலித்தீனின் அமைப்பு வாய்ப்பாடு
அ) $-CH_2-CH$ ஆ) $-CH_2-CH_2$
இ) $(-CH_2-CH_2)n$ ஈ) $(-CH-CH_2)_n$

66. துரு என்பது
அ) இரும்பு (III) ஆக்ஸைடு
ஆ) இரும்பு ஹைட்ராக்ஸைடு
இ) பெரிக் ஹைட்ராக்ஸைடு மற்றும் பெர்ரிக் ஆக்ஸைடு ஆகியவற்றின் கலவை
ஈ) இரும்பு (II) ஆக்ஸைடு

67. HIV வைரஸினைக் கண்டுபிடித்தவர்
அ) ராபர்ட் கேலோ ஆ) W.M. ஸ்டேன்லி
இ) டிமிட்ரி ஐவனோஸ்கி ஈ) எட்வர்டு ஜென்னர்

68. நீரில் மிதக்கும் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு
அ) வாலிஸ்நீரியா ஆ) ஐக்கார்னியா
இ) நிம்ஃபயா ஈ) லிம்னோ ஃபைபில்லா

69. 'சூழ்நிலை' என்னும் சொல்லை வரையறுத்தவர்
அ) ராய்ட்டர் ஆ) ஹெக்கல்
இ) பிரிஸ்ட்லி ஈ) கொலம்பஸ்

70. சன் டி யூ தாவரம் என்று அழைக்கப்படுவது
அ) நெப்பந்தஸ் ஆ) அட்ரிகுலேரியா
இ) டுரோசிரா ஈ) அகாரிகஸ்

71. லெப்டோஸ்பைரா என்பது
அ) கோள வடிவ பாக்டீரியா ஆ) கோல் வடிவ பாக்டீரியா
இ) உருளை வடிவ பாக்டீரியா ஈ) சுருள் வடிவ பாக்டீரியா

72. இருவேறு இனங்களைச் சேர்ந்த விலங்குகளிடையே மேற்கொள்ளப்படும் மாற்று அறுவை சிகிச்சை
அ) ஐசோகிராப்ட் ஆ) அல்லோகிராப்ட்
இ) ஜீனோகிராப்ட் ஈ) லாப்ரா கிராப்ட்

73. தாவரங்களுக்கு வறட்சியைத் தாங்கும் தன்மையை அளிக்கும் நுண் ஊட்டப் பொருள்
அ) போரான் ஆ) மாலிப்டினம்
இ) துத்தநாகம் ஈ) மாங்கனீஸ்

74. ஆலிகோலெசித்தல் முட்டைகள் காணப்படுவது
அ) பாலூட்டிகளில் ஆ) ஆம்பியாக்ஸிஸில்
இ) இரு வாழ்விகளில் ஈ) பறவைகளில்

75. கைரோப்டெரிஃபிலி என்பது
அ) பூச்சிகளால் மகரந்தச் சேர்க்கை அடையும் மலர்கள்
ஆ) பறவைகளால் மகரந்தச் சேர்க்கை அடையும் மலர்கள்
இ) வெளவால்களால் மகரந்தச் சேர்க்கை அடையும் மலர்கள்
ஈ) குருவிகளால் மகரந்தச் சேர்க்கை அடையும் மலர்கள்

76. ரத்தச் சிவப்பணுக்களின் வாழ்நாள்
அ) 120 நாட்கள் ஆ) 100 நாட்கள்
இ) 150 நாட்கள் ஈ) 180 நாட்கள்

77. பால்முறை இனப்பெருக்கத்திற்கென நடைபெறும் செல் பிரிவு
அ) மைட்டாசிஸ் ஆ) ஏமைட்டாசிஸ்
இ) மெட்டாபேஸ் ஈ) மியாசிஸ்

www.LatestWalkin.com

www.LatestWalkin.com

78. 'செருப்பு வடிவ உயிரி' என்று அழைக்கப்படுவது
அ) யூக்ளினா ஆ) பாரமீசியம் காடேட்டம்
இ) ரைசோபியம் ஈ) பாக்டீரியா

79. தாவரங்களுக்குத் தாங்கும் சக்தியையும், வலிவையும் அளிக்கும் திசு
அ) கோலன்கைமா ஆ) ஸ்கிளிரன்கைமா
இ) பாரன்கைமா ஈ) நார்கள்

80. பட்டுப் பூச்சியைத் தாக்கும் வைரஸ் நோய்
அ) பெப்ரைன் ஆ) ஃபிலாஸ்செரி
இ) கிராஸ்செரி ஈ) மஸ்கார்டைன்

81. நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன்
அ) முதலாம் நந்திவர்மன் ஆ) இரண்டாம் நந்திவர்மன்
இ) மூன்றாம் நந்திவர்மன் ஈ) முதலாம் மகேந்திரவர்மன்

82. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று அழைக்கப்படும் நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) சீவகசிந்தாமணி ஈ) திருக்குறள்

83. 'தமிழ் இணையப் பல்கலைக் கழகம்' தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 2000 ஆ) 1999
இ) 2001 ஈ) 2003

84. பிச்சாவரம் சதுப்பு நிலக்காடுகள் தமிழ்நாட்டில் காணப்படும் மாவட்டம்
அ) விழுப்புரம் ஆ) கடலூர்
இ) அரியலூரர் ஈ) பெரம்பலூர்

85. 'குடியரசு' என்ற பத்திரிகையைத் தொடங்கியவர்
அ) அண்ணா ஆ) பாரதியார்
இ) திரு.வி.க. ஈ) பெரியார்

86. திருவள்ளுவர் ஆண்டு எதிலிருந்து தொடங்குகிறது?
அ) கி.மு.30 ஆ) கி.பி. 30
இ) கி.மு.31 ஈ) கி.பி. 31

87. ISP என்பதன் விரிவாக்கம்
அ) Internet service provider
ஆ) Internet Service protocol
இ) International service protocol
ஈ) International service provider

88. 1 டெரா பைட் என்பது கீழ்க்கண்டவற்றில் எதற்குச் சமமானது?
அ) 1024 பைட் ஆ) 1024 கிலோ பைட்
இ) 1024 மெகா பைட் ஈ) 1024 ஜிகா பைட்

89. 'உலக மக்கள் தொகை தினம்' அனுசரிக்கப்படும் நாள்
அ) மே 22 ஆ) ஆகஸ்ட் 23
இ) ஜூலை 11 ஈ) அக்டோபர் 1

90. ஐ.நா. சபையின் தற்போதைய பொதுச் செயலாளர் பான் கி மூன் எந்த நாட்டைச் சார்ந்தவர்?
அ) வடகொரியா ஆ) தென் கொரியா
இ) சீனா ஈ) ஜப்பான்

91. உலக அணுசக்திக் கழகத்தின் தலைமையிடம் உள்ள இடம்
அ) வியன்னா ஆ) சியோல்
இ) நியூயார்க் ஈ) ஜெனீவா

92. 1975ஆம் ஆண்டு இந்தியா அனுப்பிய முதல் செயற்கைக்கோள்
அ) பாஸ்கரா-1 ஆ) ரோஹிணி - I
இ) ஆர்யபட்டா ஈ) ஐ.ஆர்.எஸ்.1 A

93. இந்திய யுரேனியக் கழகம் உள்ள இடம்
அ) புவனேஷ்வர் ஆ) ஜடுகுடா
இ) சிங்பும் ஈ) ராஞ்சி

94. கிழக்குத் தொடர்ச்சி மலையின் மிக உயர்ந்த சிகரம்
அ) தொட்டபெட்டா ஆ) ஆனைமுடி
இ) தவளகிரி ஈ) மகேந்திரகிரி

95. சமீபத்தில் கிராண்ட் மாஸ்டர் தகுதியைப் பெற்ற 23ஆவது இந்திய வீரர் அதீபன் எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்?
அ) தமிழ்நாடு ஆ) கேரளா
இ) ஆந்திரா ஈ) கர்நாடகா

96. 'சென்னை தினம்' (Madras Day) கொண்டாடப்படும் நாள்
அ) மே 21 ஆ) ஏப்ரல் 14
இ) ஆகஸ்ட் 22 ஈ) செப்டம்பர் 17

97. இந்தியா எத்தனையாவது சுதந்திர தினத்தை ஆகஸ்ட் 15, 2010இல் கொண்டாடியது?
அ) 62ஆவது ஆ) 63ஆவது
இ) 64ஆவது ஈ) 65ஆவது

98. இந்தியாவில் கடைசியாக ஜாதிவாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்ட வருடம்
அ) 1921 ஆ) 1931
இ) 1941 ஈ) 1951

99. ஃபிரெஞ்ச் ஓபன் 2010ஆம் ஆண்டிற்கான போஸ்டரை டிசைன் செய்த நளினி மாலனி எந்த நாட்டைச் சார்ந்தவர்?
அ) இந்தியா ஆ) இங்கிலாந்து
இ) பிரான்ஸ் ஈ) அமெரிக்கா

100. பாங்க் ஆஃப் ராஜஸ்தான் வங்கியை சமீபத்தில் இணைத்துக் கொண்ட வங்கி
அ) ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா ஆ) இந்தியன் வங்கி
இ) ஐ.டி.பி.ஐ. வங்கி ஈ) ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி

## விடைகள் :

1.ஆ), 2.அ), 3.இ), 4.அ), 5.ஈ), 6.ஆ), 7.இ), 8.அ), 9.ஈ), 10.இ), 11.அ), 12.ஆ), 13.இ), 14.அ), 15.ஆ), 16.இ), 17.அ), 18.ஈ), 19.இ), 20.ஆ), 21.அ), 22.ஆ), 23.அ), 24.இ), 25.ஈ), 26.அ), 27.ஆ), 28.இ), 29.ஈ), 30.அ), 31.இ), 32.ஈ), 33.ஆ), 34.ஈ), 35.அ), 36.இ), 37.ஆ), 38.ஈ), 39.இ), 40.அ), 41.இ), 42.ஈ), 43.ஆ), 44.அ), 45.இ), 46.ஈ), 47.இ), 48.அ), 49.ஆ), 50.இ), 51.அ), 52.ஈ), 53.இ), 54.ஆ), 55.இ), 56.அ), 57.ஆ), 58.அ), 59.இ), 60.ஆ), 61.இ), 62.ஆ), 63.அ), 64.ஈ), 65.இ), 66.இ), 67.அ), 68.ஆ), 69.ஆ), 70.இ), 71.ஈ), 72.இ), 73.அ), 74.ஆ), 75.இ), 76.அ), 77.ஈ), 78.ஆ), 79.அ), 80.இ), 81.இ), 82.அ), 83.இ), 84.ஆ), 85.ஈ), 86.இ), 87.அ), 88.ஈ), 89.இ), 90.ஆ), 91.அ), 92.இ), 93.ஆ), 94.ஈ), 95.அ), 96.இ), 97.இ), 98.ஆ), 99.அ), 100.ஈ).

www.LatestWalkin.com